IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**OS.No.208/2020**

**நாள்– 12.10.2023**

**அபுபக்கர் சித்திகா**

**பி.வா.சா.1** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த வழக்கு குறித்த முழு விபரங்களும் எனக்கு தெரியும். என்னுடைய கணவர் மீதும், என்னுடைய கணவர் குடும்பத்தார் மீதும் தென்காசி நடுவர் நீதிமன்றத்தில் டிவிசி.4/2016 என்கிற வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த மனுவில் எனக்கும், என்னுடைய கணவருக்கும் 02.06.2007 ல் என்னுடைய மூத்த மகன் பிறந்ததாக கூறியிருக்கிறேன். மகன் பிறந்தபின்பு என்னுடைய கணவர் மது அருந்தி என்னை அடித்து துன்புறுத்தியதாக அந்த மனுவில் கூறியிருக்கிறேன். அந்த மனுவில் 10 லட்சம் வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதாகவும் கூறியிருக்கிறேன். அவ்வாறு 10 லட்சம் தரவில்லை என்றால் வேறொரு பெண்ணை திருமணம் செய்து வைப்பதாகக் கூறி என்னுடைய கணவர் மற்றும் குடும்பத்தார் என்னை அடித்து துரத்திவிட்டதாக கூறியிருக்கிறேன். மேற்படி சம்பவத்திற்கு பின்பு என் தாய் தந்தையர் 1,75,000/–ரூபாய் ரொக்கமும், 72 கிராம் தங்க நகைகளும் என்னுடைய கணவரின் வீட்டாருக்கு கொடுத்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு சேர்த்துவைத்தபின்பு தான் 29.03.2014 ல் 2 வது குழந்தையான ஷயிதா இப்ரா என்ற குழந்தை பிறந்தது என்றால் சரிதான். இந்த குழந்தை பிறந்த பின்பும் என்னுடைய கணவர் எங்களுக்கு வேண்டிய உணவு, உடை, மருத்துவச் செலவு போன்றவற்றைத் தராமல் கொடுமைப்படுத்தியதாகவும் கூறியிருக்கிறேன். இந்த மனுவில் என்னுடைய கணவர் வேறொரு பெண்ணுடன் சட்ட விரோதமான தொடர்பில் இருப்பதாகவும் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான்.

மேலும் இந்த மனுவில் என்னுடைய கணவர் பணத்திற்காக எந்த நிலைக்கு வேண்டுமென்றாலும் இறங்குவார் என்றும், என்னுடைய தாய் தந்தையரை கொலை செய்யவும் முயற்சித்தாகக் கூறியிருக்கிறேன். அந்த மனுவில் நானும், எனது குழந்தைகளும் அமைதியாக வாழ்வதை என்னுடைய கணவரும், குடும்பத்தாரும் இடையூறு செய்யக்கூடாது என்ற பரிகாரமும் கேட்டிருக்கிறேன் என்றால் சரிதான். என்னை மனதாலோ, உடலாலோ என்னுடைய கணவரும், அவருடைய குடும்பத்தாரும் எவ்வித துன்புறுத்தலும் செய்யக்கூடாது என்ற பரிகாரமும் கேட்டிருக்கிறேன் என்றால் சரிதான். என் குழந்தைகளை படிக்க வைக்க விரும்புவதை என்னுடைய கணவரோ, அவரது குடும்பத்தாரோ எவ்வித தடையும் ஏற்படுத்தக்கூடாது என்ற பரிகாரமும் கேட்டிருக்கிறேன் என்றால் சரிதான். நான் விரும்பிய வேலைக்கு செல்வதற்கு என்னுடைய கணவரும், அவரது குடும்பத்தாரும் எவ்வித தடையும் ஏற்படுத்தக்கூடாது என்ற பரிகாரமும் கேட்டிருக்கிறேன் என்றால் சரிதான். மேலும் இந்தமனுவில் வரதட்சணையாக கொடுத்த 80 களஞ்சி தங்க நகைகள், 3 லட்சம் பெறுமான பண்ட பாத்திரங்கள், ரொக்கமாக வரதட்சணையாகக் கொடுத்த 2,50,000/-ரூபாய் மேலும், கூடுதல் வரதட்சணையாக 1ம் எதிர்மனுதாரருக்கு இந்த மனுதாரர் குடும்பத்தார் வழங்கிய ரூ.1,75,000/- ரொக்கம் மற்றும் 72 கிராம் தங்க நகை மேற்கண்ட பொருட்களை திரும்ப ஒப்படைக்கும் பொருட்டும், இவ்வழக்கு முடியும் வரை மேற்கண்ட பொருட்களை எந்தவித வில்லங்கமும் செய்யக்கூடாது என்றும், குறிப்பாக மனுதாரரின் குடும்பத்தார் திருமணத்திற்காக செலவு செய்த தொகை ரூ.2 லட்சம் திரும்ப ஒப்படைத்துப்போகும் படிக்கும் என்று பரிகாரங்கள் கோரியிருக்கிறேன் என்றால் சரிதான். என்னுடைய மருத்துவச் செலவு மற்றும் என்னுடைய குழந்தைகளின் மருத்துவச் செலவிற்கு 6 லட்சம் நஷ்ட ஈடு கோரியும் அந்த மனுவில் கூறியிருக்கிறேன். என் கணவரின் சொத்தைப் பொறுத்தோ அவரது குடும்பத்தாரின் சொத்தைப் பொறுத்தோ அந்த மனுவில் பரிகாரம் ஏதும் கோரவில்லை என்றால் அந்த வீடு எனக்கு கிடைக்கும் என்பதால் பரிகாரம் எதுவும் கோரவில்லை. 29.10.2019 ல் என்னுடைய கணவர் இந்த வழக்குரை சொத்தைப் பொறுத்து ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியிருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய கணவர் பிசியோதெரபிஸ்ட் என்றால் சரிதான். இந்த கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 15

லட்சரூபாயை இந்த வாதியிடம் முன்தொகையாகப் பெற்றிருக்கிறார் என்ற விபரமும் எனக்கு தெரியாது. இந்த கிரைய ஒப்பந்தத்தில் ஒரு வருட உள்வாய்தா எழுதப்பட்டு மீதி 3 லட்ச ரூபாயை 28.10.2020 க்குள் செலுத்தவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் தாக்கல் செய்த கிரைய ஒப்பந்தத்தை நான் படித்துப்பார்க்கவில்லை. இந்த கிரைய ஒப்பந்தத்தில் இதில் கண்ட மீதத் தொகையை 1வது நபர் நீதிமன்றத்தில் செலுத்தி கிரையம் பெற நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்று கூறப்பட்டிருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையெழுத்திட்ட சாகுல் ஹமீது, த/பெ.காட்டுப்பாவா, 2வது சாட்சிக் கையெழுத்திட்ட சாகுல் ஹமீது, த/பெ.ரகுமத்துல்லா ஆகியோர்கள் கூறியதன் பேரில் வாதி அவருடைய பிள்ளைகள் செங்கோட்டையில் படிப்பதால் இந்த சொத்தை கிரையம் பெறுவதற்கு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியிருக்கிறார் என்று எனக்கு தெரியாது. இந்த கிரையத்தை முடிப்பதற்காகத்தான் வாதி மீனாட்சிபுரத்தில் அவரது மனைவி பெயரில் உள்ள சொத்தை 10 லட்சத்திற்கு விற்று மனைவியின் நகைகளையும் விற்றிருக்கிறார் என்றால் சரியல்ல. 15 லட்சத்தையும் தயாராக வைத்துக்கொண்டு வாதி கிரையம் முடிக்க தயாராக இருந்தபோது என்னுடைய கணவர் தான் நான் கர்ப்பமாக இருப்பதால் குழந்தை பிறந்த பிறகு கிரையத்தை முடித்துக்கொள்ளலாம் என்று கூறினார் என்றால் அது சரியல்ல. அதன் பின்பும் என்னுடைய கணவர் என்னுடைய பிரசவ செலவிற்காக ஒருலட்சம் கைமாற்றாக கேட்டதன் பேரில் இந்த ஒரு லட்சத்தையும் வாதி என்னுடைய கணவருக்கு கொடுத்திருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தம் போடும் போது தாவா சொத்தின் முன் அசல் ஆவணங்களையும் வாதியிடம் என் கணவர் ஒப்படைத்திருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பேறுகால செலவாகப் பெற்ற ஒரு லட்சத்தையும் 5 ஆயிரம், 10 ஆயிரம் என்று மொத்தம் 89 ஆயிரம் மட்டுமே திரும்பக் கொடுத்திருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரையத்தை முடிப்பதற்காக என்னுடைய கணவருக்கு வாதி 14.10.2020 ல் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் 19.10.2020 ல் காலை 10.00 மணிக்கு செங்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் மீதி கிரையத் தொகையான ரூ.3 லட்சத்தை

வைத்துக்கொண்டு தயாராக இருப்பதாகக் கூறியபின்பும் என்னுடைய கணவர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தென்காசி, செங்கோட்டை வழக்கறிஞரை வைக்காமல் சங்கரன்கோவில் வழக்கறிஞர் மூலமாக என்னுடைய கணவர் ஒரு பதில் அறிவிப்பு அனுப்பியிருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பதில் அறிவிப்பில் என்னுடைய கணவர் 10 லட்சம் கடனாகப் பெற்றதாகவும், அதில் 30 ஆயிரத்தை வட்டிக்காக எடுத்துக்கொண்டு மீதி 9,70,000/- மட்டுமே பெற்றுகொண்டதாக கூறியிருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய பேறுகால செலவிற்காக வாங்கிய ஒரு லட்சத்திற்கான தொகைக்கு 5 ஆயிரம், 10 ஆயிரமாக வட்டிக்காகத்தான் வாதியின் வங்கிக் கணக்கில் அனுப்பியதாக கூறியிருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னை சேர்க்காமல் வாதியானவர் என்னுடைய கணவரை மட்டும் தரப்பினராக சேர்த்து இந்த வழக்கைத் தாக்கல் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் என்னுடைய கணவர் ஆஜராகி தான் கடனுக்காகத்தான் பணம் வாங்கியதாக எதிர்வழக்குரையில் கூறியிருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2020 பிப்ரவரி மாதம் வரைவட்டி செலுத்தியதாகவும், அதன் பின்பு கொரோனா காரணமாக வட்டி செலுத்தவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய கணவர் பிசியோதெரபிஸ்ட் என்பதால் கோவிட் காலத்திலும் அவர் பணியாற்றுவதற்கு அரசு அனுமதித்திருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் விசாரணைக்கு வந்தபோது என்னுடைய கணவர் ஒருதலைபட்சமான பின்பு நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்ந்திருக்கிறேன் என்றால் சரிதான். குடும்ப வன்முறை வழக்கில் 03.09.2021ல் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த தீர்ப்பில் தான் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்து, எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகியவற்றில் எந்தவிதமான வில்லங்கமும் எதிர்மனுதாரர் செய்யக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். இதற்கு முன்பாக குறுக்குவிசாரணையிலேயே எதிர்மனுதாரரிடம் எனக்கு பணம், நகை பொருட்கள் கொடுக்கவில்லை என்றால் வீட்டை கொடுக்கவேண்டியிருக்கும் என்று என்னுடைய வழக்கறிஞர் கேட்டிருக்கிறார். அதற்குப் பின்பு தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த தீர்ப்பின் பேரில் எதிர்மனுதாரர் மீது குற்ற

நடவடிக்கைக்காக மனு தாக்கல் செய்திருக்கிறேன். அந்த மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வேண்டுமென்றால் தாக்கல் செய்யலாம். இந்த வழக்கில் நான் 2 பிரதிவாதி. 3, 4 பிரதிவாதிகள் என்னுடைய இளவர் குழந்தைகள். அவர்களுக்காக பாதுகாப்பாளர் என்ற நிலையில் வழக்கை நடத்துகிறேன். இந்த வழக்கிற்கு நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்துப்பார்த்து தான் கையெழுத்திட்டிருக்கிறேன். இந்த எதிர்வழக்குரையில் வாதியும், என்னுடைய கணவரும் எனக்கு ஜீவனாம்சம் கிடைக்கக்கூடாது என்பதற்காக மோசடியாக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியதாகக் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலம் நான் கூறித்தான் தயார் செய்யப்பட்டிருக்கிறது. அதை நான் படித்துப்பார்த்திருக்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் என்னுடைய கணவர்கிரையம் முடிப்பதற்காக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தவில்லை என்றும் கடன் வாங்கியதற்காகத்தான் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியிருக்கிறேன் என்று கூறியிருக்கிறேன். இந்த கிரைய ஒப்பந்தம் கடனுக்காக வாங்கியது என்பது நன்கு புலப்படும் என்று கூறியிருக்கிறேன். மீதி கிரையத் தொகை 3 லட்சம் வைப்பீடு செய்யாததில் இருந்தே இது மோசடியான கிரைய ஒப்பந்தம் என்றும் கூறியிருக்கிறேன். வாதி 3 லட்சத்தை இந்நீதிமன்றத்தில் 25.09.2023ல் வைப்பீடு செய்திருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி வேறு நபர்களுக்கு கடன் கொடுத்ததாகவோ, பிரச்சனை ஏற்பட்டதாகவோ கடன் கொடுக்கும் தொழில் செய்கிறார் என்பதற்காகவோ ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கின் வாதி மனநல ஆலோசகர் என்றும், அவர் நல்ல குடும்பத்தை சேர்ந்தவர் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. அவர் மதத்திற்கும், மதக்கோட்பாட்டிற்கும் விரோதமாக வட்டித் தொழில் எதுவும் செய்யமாட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய கணவர் பணம் பெறுவதற்காக எந்த நிலைக்கு வேண்டுமென்றாலும் இறங்கி வருவார் என்றால் என்னிடம் அவ்வாறு நடந்துகொள்வார். வாதியிடத்தில் எவ்வாறு நடந்துகொள்வார் என்று எனக்கு தெரியாது. வாதி தன்னுடைய பிள்ளைகள் படிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் கிரையத்தை முடிப்பதற்காகத்தான் இந்த கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியிருக்கிறார் என்றும் ஆனால் நான் என்னுடைய கணவர் கடனுக்காக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியதாகவும், என்னை ஏமாற்றுவதற்கு

மோசடியாக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியதாகவும் கூறுகிறேன் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு எனக்கு எதிராக தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.10.12 17:58:03 +0530